

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டம், தாப்பாத்தி கிராமத்தில் இளைஞர் தமிழர் மறுவாழ்வு முகாம் மக்களுக்கு புதிதாக ரூ. 415லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 72 வீடுகளை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பெ.கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் பயனாளிகளுக்கு சாவிகள் வழங்கினார். நிகழ்விற்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், தூத்துக்குடி கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஐஸ்வர்யா, ஒன்றிய செயலாளர்கள் மும்மூர்த்தி, ராதாகிருஷ்ணன், செல்வராஜ், அன்புராஜன், இம்மானுவேல், மாவட்டப் பிரதிநிதி சோலைசாமி, உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.



திருச்செந்தூர் வட்டம் காயல்பட்டினம் நகராட்சி ஓடக்கரையில் சட்டமன்ற மேம்பாட்டு நிதியில் ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் சிறுபாலம் கட்டும் பணியினை தமிழக மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் பார்வையிட்டார் உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், காயல்பட்டினம் நகர் மன்றத் தலைவர் முத்து முகம்மது, ஒன்றிய செயலாளர்கள் ஏ.பி.ரமேஷ், கே.கே. ஆர்.ஜெயக்கொடி, ஆழ்வை முன்னாள் சேர்மன் ஜனகர், வழக்கறிஞர் கிருபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காக

# தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறைக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக். 8 –

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்குநர் கே. பாலசுப்ரமணியம், சந்தித்து, ஒன்றிய பாதுகாப்புத் துறையின் சார்பில் புதுதில்லியில் நடைபெற்ற தேசிய மாநாட்டில், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறை அளித்துள்ள சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ் மற்றும் முற்போக்கு மாநிலம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறை என்பதற்கான கேடயம் (Progressive State – Rajya Sainik Board, Tamil Nadu) ஆகியவற்றை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

நாம் சுதந்திரக் காற்றை சுவாசிக்க, கொட்டும் மழையிலும், குளிரிலும் தமது இன்னுயிரையும் பொருட்படுத்தாது தாய் திருநாட்டிற்காக தங்களது இளம் வயதை இராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவு பெற்ற, ஓய்வு பெற்ற முன்னாள் படைவீரர்களின் நலன் காக்க, இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு தொகுப்பு ஊதியம் வழங்குதல், படைப் பணியில் போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு, முன்னாள் படைவீரர்களுக்கு மறுவேலைவாய்ப்பு அளித்தல், முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு, முன்னாள் படைவீரர்கள் சுயதொழிலில் ஈடுபடவும் மற்றும் சிறந்த தொழில் முனைவோர்களாக மாற்றிட தேவையான நிதி மற்றும் பயிற்சிகள் வழங்கும் "முதல்வரின் காக்கும் கரங்கள்" என்ற புதிய திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

முன்னாள் படைவீரர்களின் வாழ்வு வளம் பெறும் வகையில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களை கருத்தில் கொண்டு, மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த 29.09.2025 மற்றும் 30.09.2025 ஆகிய தேதிகளில் புதுதில்லியில் நடைபெற்ற தேசிய மாநாட்டில், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறை அளித்துள்ள சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக பாராட்டுச் சான்றிதழ் மற்றும் முற்போக்கு மாநிலம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறை என்பதற்கான கேடயம் ஆகியவை வழங்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களிடம் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயத்தை காண்பித்து வாழ்த்துப் பெற்ற நிகழ்வில், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், முன்னாள் படைவீரர் நலத்துறை துணை இயக்குநர் லெப்டினன்ட் கமாண்டர் கே. செந்தில் குமார் (ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) எழுதிய 'சப்யாதா கி யாத்ரா: சிந்து சே வைகை'

# 'ஒரு பண்பாட்டின் பயணம் : சிந்து முதல் வைகை வரை" இந்தி மொழி பெயர்ப்பு நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, அக். 8-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.10.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளையின் அறங்காவலர் ஆர்.பாலகிருஷ்ணன், அவர்கள் எழுதிய 'சப்யாதா கி யாத்ரா: சிந்து சே வைகை' (ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை) இந்தி மொழிபெயர்ப்பு நூலினை வெளியிட, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமும் இந்தி மொழியின் முன்னணிப் பதிப்பாளரான வாணி பிரகாஷனும் இணைந்து இந்த நூலை வெளியிட்டுள்ளார்கள்.

சிந்து சமவெளி நாகரிகம் விட்ட இடமே தமிழின் சங்கம் தொட்ட இடம் என்பதை இந்த நூலில் ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் சான்றுகளுடன் நிறுவியிருக்கிறார்.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் செயல்படுத்தி வரும் திசைதோறும் திராவிடம், இந்த நூல் வெளியீடு வழியாக இந்தி மொழிக்கும் விரிவாகியி ருக்கிறது. இதன்மூலம், 60 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் இந்தி மொழியின் முன்னணிப் பதிப்பு நிறுவனமான வாணி பிரகாஷன் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இந்த நூலை சுரபி கத்யால், ஜோதி லாவண்யா ஆகியோர் இந்தியில் மொழிபெயர்ப்பு செய்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி. சந்தர மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி மைய முதல்வர் முனைவர் தே.ச. சரவணன், வாணி பிரகாஷன் பதிப்பகத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி அதிதி மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை!

# செஞ்சி ஒன்றியம் காரையில் ரூ.13.59 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

*செஞ்சி, அக். 8 -*

*விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் காரை ஊராட்சியில் புதியதாக ரேஷன் கடை கட்டிடம் கட்ட வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.*

*பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 13.59 லட்சம்ரூபாய் மதிப்பீட்டில் புதியநியாய விலை கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.*

*ஊராட்சி மன்ற தலைவர்கலையரசி வெங்கடேசன் அனைவரையும் வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு புதியதாக கட்டப்பட்ட நியாய விலை கடையை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கி சிறப்புரை யாற்றினார்.*

*இதில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் ,ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராமஜெயம் சின்னதுரை,*

*மேல் அருங்குணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளர்பலராமன், ஒன்றிய நிர்வாகிகள் செல்வமணி, வாசு, அய்யாதுரை, அனையேரி ரவி, இக்பால், ஊராட்சி நிர்வாகி கள் பாண்டியன், ரவிச்சந்திரன், கருணாகரன், ஜெய்சங்கர், நல சக்கரவர்த்தி, சீதாராமன் வீரமணி இளைஞரணி சிவா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். விற்பனையாளர் தினேஷ்குமார் நன்றி கூறினார்.*



கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலம், பீளமேடு, வார்டு எண்.52க்குட்பட்ட ஹட்கோ குடியிருப்பு பகுதியில் தனியார் பங்களிப்புடன் (பி.எஸ்.ஜி. மருத்துவமனை மற்றும் அறக்கட்டளை) ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நினைவு பூங்காவை மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி., மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இதில் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன், நா.கார்த்திக், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தே.மு.தி.க. பொதுச் செயலாளர்

# பிரேமலதா விஜயகாந்த் தாயார் அம்சவேணி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, அக். 8 -**

**தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் தாயார் அம்சவேணி அவர்களின் மறைவையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:**

தே.மு.தி.க. பொதுச் செயலாளர் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்களுடைய தாயார் அம்சவேணி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பெற்றெடுத்து அன்பு செலுத்தி வளர்த்த அன்னையை இழந்து வாடும் பிரேமலதா விஜயகாந்த், தே.மு.தி.க.,வின் பொருளாளர் எல்.கே.சுதீஷ் உள்ளிட்ட அவர்களது குடும்பத்தினர் அனைவர்க்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன், எம்.பி. அறிக்கை!

*தேனி, அக். 8 -*

*போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர். தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்செல்வன்.எம்பி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணை யின்படி போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் எனது (தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி.) தலைமையில் இன்று (08.10.2025) மாலை 5.00 மணியளவில் வீரபாண்டி தனலட்சுமி மஹாலில் நடைபெற உள்ளது கழக துணை பொது செயலாளர் ஊரக உள்ளாட்சித்துறை அமைச்சர். ஐ.பெரியசாமி மற்றும் மண்டல பொறுப்பாளர் , நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் விருதுநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்கம் தென்னரசு ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.*

*இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள் ,மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர் கழக செயலாளர்கள்வர் வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA 2) பாக கமிட்டி உறுப்பினர்கள் டிஜிட்டல் ஏஜென்ட்கள் (BDA) சார்புஅணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிகள், கழக முன்னோடிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் தேனி வடக்கு மாவட்டக் கழக செயலாளரும் தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ்ச் செல்வன். எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

# திருச்சி பெல் தொ.மு.ச. நிர்வாகிகள்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் திருச்சி பெல் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 239/TRI, பேரவை இணைப்பு எண். 298) நிர்வாகிகள் தேர்தல் பேரவையின் இணைப் பொதுச்செயலாளர் திரு. ஜெ.விஜயகுமார் அவர்களை தேர்தல் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டது. தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக தேர்வு பெற்றுள்ளனர்.

**நிர்வாகிகள்**

| | |
|---|---|
| தலைவர் | – **திரு. மு.சண்முகம் Ex.MP** |
| துணைத் தலைவர்கள் – | 1) B. உம்மர்கான் (பணி எண் 6064930) |
| | 2) R. குமார் (பணி எண் 6220991) |
| | 3) G. சதீஷ்குமார் (பணி எண் 6086543) |
| | 4) N. சரவணன் (பணி எண் 2214121) |
| | 5) R. சுந்தர் (பணி எண் 2217171) |
| | 6) R. பிரகாஷ் (பணி எண் 6131182) |
| | 7) P. ராஜ் (பணி எண் 6004946) |
| | 8) J. ஜோசப்ஸ்டாலின் (பணி எண் 6092268) |
| பொதுச்செயலாளர் – | K. தீபன் (பணி எண் 2216728) |
| துணைப்பொதுச்செயலாளர் | – C. முத்துக்குமார் (பணி எண் 2217082) |
| துணைச்செயலாளர்கள் – | 1) G. கார்த்திக் (பணி எண் 2215489) |
| | 2) M. கார்த்திகேயன் (பணி எண் 6033008) |
| | 3) K.P. பழனிவேல் (பணி எண் 6131646) |
| | 4) S. மணிகண்டன் (பணி எண் 2217279) |
| | 5) N. ராஜேஷ் (பணி எண் 6226558) |
| | 6) R. லெட்சுமண கிருஷ்ணன் (பணி எண் 6022707) |
| | 7) S. லோகேஷ்குமார் (பணி எண் 2218003) |
| | 8) J. இயேசு ராஜா (பணி எண் 6114377) |
| | 9) O. வசிகரன் (பணி எண் 6004326) |
| | 10) N. விக்னேஷ் (பணி எண் 6129471) |
| | 11) N. விஜயகுமார் (பணி எண் 6224997) |
| | 12) S. வீரசுடலைக்கண் (பணி எண் 2217139) |
| | 13) R. வெங்கடேசன் (பணி எண் 2216744) |
| அமைப்புச் செயலாளர் – | P. கருப்பு (பணி எண் 6223591) |
| பொருளாளர் – | P. பூபாலன் (பணி எண் 2216582) |

இடம்: கலைஞரகம்
நாள்: 07.10.2025

**மு.சண்முகம்,** Ex.MP
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை



புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் தொகுதி சுல்தான்பேட்டையில் ரூ. ஒரு கோடியே 61 லட்சம் செலவில் புதிய தார்ச் சாலை அமைக்கும் பணியை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார் . உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.